REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 11 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
தினகரன்

வரு. 89 இல. 09 | January 11, Monday, 2021 | 24பக்கங்கள் | 30/-

## கிராண்ட்பாஸ், மாளிகாவத்தை, தெமட்டகொடை இன்று விடுவிப்பு

### சில பகுதிகள் முடக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக தனிமைப்படுத்தல் முடக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்த கொழும்பு கிராண்ட்பாஸ், மாளிகாவத்தை, மற்றும் தெமட்டகொடை பிரதேசங்கள் இன்று காலை 5 மணி முதல் விடுவிக்கப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் கட்டுப் பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு

06

### எதிரணியினர் போல மோசமான அரசியலில் ஈடுபட மாட்டேன்;

# எனக்கு குண்டு வைத்த புலிகளின் தலைவருக்கு என்ன நடந்தது?

### மக்களுக்கு எல்லாம் தெரியும் என்கிறார் ஜனாதிபதி

நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷ அல்லது கோட்டாபய ராஜபக்ஷ என்ற எந்த ஆளுமைக்கு ஏற்பவும் செயற்பட தயார் என்ற போதும், எதிர்க்கட்சி போன்று மோசமான அரசியலுக்கு தான் தயாராக இல்லை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தவறு செய்தவர்களைத் தண்டிப்பது சட்டத்தின் கடமையாகும். அதில் தலையிட்டு முந்தைய அரசாங்கம் செய்ததைப் போல அரசியல் பழிவாங்க தான் தயாராக இல்லை என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். மக்களை தவறாக வழிநடத்தாமல் நியாயமான அரசியலில் ஈடுபடுமாறு எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

மகா சங்கத்தினர் உட்பட மக்கள் தான் ஜனாதிபதியாக

06



### பொல்பிதிகம கலாசார நிலையம் பிரதமரினால் திறப்பு



புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நிறுவப்பட்ட பொல்பிதிகம கலாசார நிலையம் புத்தசாசன சமய மற்றும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் (09) திறந்து வைக்கப் பட்டது. நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு அபிவிருத்தி வேலைத்திட்டத்தை யதார்த்தமாக்கி, பொது நிதியத்திலிருந்து இந்த கலாசார நிலையம் 25 மில்லியன் ரூபாய் நிதி செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன்போது பிரதமரினால் கலாசார நிலையத்திற்கான

06

### எமக்கு தேவை யுத்தத்தின் நினை

# அமைதிக்கா
# சின்னமே அவசியம




### பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க

யாழ்.பல்கலைக்கழக நினைவுத் தூபி நாட்டின் ஐக்கியத்திற்கு அச்சுறுத்தலாக காணப்பட்டது. நாட்டிற்கு யுத்த நினைவுச் சின்னங்கள் அவசியமில்லை, சமாதான நினைவுச் சின்னங்களே அவசியம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரசிங்க தெரிவித் துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் நினைவுத்தூபியை அகற்றுவதற்கு வெள்ளியிரவே தீர்மானித்தார். 2018இல் உருவாக்கப்பட்ட இந்த நினைவுத்தூபி பின்னர் மெருகூட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் தொடர்ந்து பேசிய அவர்,

> யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தகர்ப்பு தொடர்பாக அறிக்கை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா இன்று இலங்கையிலுள்ள அருமையான திறமை மிக்க தலை சிறந்த உபவேந்தர். அத்தோடு மிகவும் திறமையான நிர்வாகி. சமீபகாலப்பகுதியில் நான் கண்ட திறமைமிக்க உபவேந்தர்.

06



### மேல் மாகாணம், தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த;

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் தவிர்ந்த நாட்டின் ஏனைய அனைத்து பாடசாலைகளும் இன்றைய தினம் கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட உள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அனைத்து பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும்

06

### கொரோனா வைரஸ் தொற்று;

# நோயாளர்களின் எண்ணிக்கை 48 ஆயிரத்து 140 ஆக அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 48 ஆயிரத்து 140 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

நேற்றைய தினம் மேலும் வைரஸ் தொற்று நோயாளர்கள் புதிதாக இனம் காணப்பட்டுள்ள நிலையில் மொத்த வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 47,839ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது.

அதேவேளை நேற்றைய தினம் மேலும் 487 கொரோன வைரஸ் தொற்று நோயாளர்கள் பூரண குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ள நிலையில்

மொத்தமாக குணமடைந்துள்ள கொரோனா வைரஸ்

06

# யுத்தத்தில் இறந்தவர்களை நினைவு கூர பொதுவான நினைவுத்தூபி அவசியம்

### யாழ். பல்கலைக்கழக சம்பவம் குறித்து அமைச்சரவையில் பேசுவேன்



யுத்தத்தின் காரணமாக உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு பொதுவான நினைவு தூபி அவசியமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்டமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உரிய அனுமதி பெறப்படாமல் சட்டத்திற்கு முரணாக அமைக்கப் பட்ட காரணத்தினாலேயே

06

### தேவைக்கு ஏற்ப ஊழியர்கள் மட்டுமே கடமைக்கு;

# அரச நிறுவனங்களுக்கு அமைச்சர் ஜனக பண்டார அறிவுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் தொற்று சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அரச நிறுவனங்களில் தேவைக்கேற்ப மட்டுமே ஊழியர்களை சேவைக்கு அழைக்குமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலையையடுத்து மீண்டும் இன்று முதல் அரசாங்க ஊழியர்களை சேவைக்கு அழைக்கும் வழமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நிறுவன

06

# முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுக்கு கொரோனா

### டுவிட்டரில் பதிவிட்டு தனிமைப்படுத்தலில்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தனது டுவிட்டர் செய்தியில் இதனை தெரிவித்துள்ள ஹக்கீம் தான் தனிமைப்படுத்தலை முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். நான் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளமை

06



# மலையகத்தில் உணர்வுபூர்வமாக

# ஜெனீவாவில் மூன்று பிரதான தமிழ்

# திலீபனின் சகோதரர் கொரோனாவுக்கு பலி